செ.வெ.எண் 622 நாள் 27-9-07

## ஊரகத் தொழில் துறை அமைச்சரின் திடீர் ஆய்வு

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் பழனிச்சாமி அவர்கள் இன்று (25.9.07) கிண்டியிலுள்ள டான்சியின் தலைமை அலுவலகத்தில் டான்சியின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற் கொண்டார். டான்சியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், டான்சி முதுநிலை பொது மேலாளர், மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். 2005–2006 மற்றும் 2006–07 ஆண்டுகளில் டான்சி இலாபமீட்டியுள்ளதையும் ; ரூ 60 கோடிக்கு மேல் உற்பத்தி செய்துள்ளதையும் ; எல்லா டான்சி யூனிட்டுகளும் இலாபமீட்டுவதையும் ; மற்றும் 2007 ஆகஸ்டு மாதம் வரை ரூ 29 கோடி உற்பத்தி செய்துள்ளதையும் ஆய்விலறிந்த அமைச்சர், 2007–2008 ல் உற்பத்தி மற்றும் விற்பனை ரூ 100 கோடியை தாண்ட வேண்டுமென அறிவுறுத்தினார்.

மேலும் அமைச்சர் அவர்கள் பள்ளிகளுக்காக நபார்டு உதவியுடன் விநியோகிக்கப்படவுள்ள 1,90,140 இரும்பு டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் மற்றும் மரத்தினால் ஆன 15,845 நாற்காலி மற்றும் ஸ்டீல் மேஜைகள் ஆகியவற்றை செய்வதில் முன்னேற்றம் குறித்து விசாரித்தார். முன்பணம் பெறுமுன்னரே சுமார் 10000 டெஸ்க், பெஞ்சுகளை தயார் செய்து பள்ளிகளுக்கு அனுப்பியுள்ள டான்சியின் பணியினை பாராட்டினார். இந்த சிறப்பு பணி ஆணையை முடிக்க மாதத்திற்கு சுமார் 25000 டெஸ்க், பெஞ்சுகளை தயார் செய்து அனுப்ப வேண்டுமேன அமைச்சர் அறிவுறுத்தினார்.

அதன்பின் பள்ளிகளுக்கான தளவாட சாமான்களை செய்யும் கிண்டியிலுள்ள டான்சியின் தொழிற்சாலைகளையும், மற்றும் திட்ட அலுவலகத்தையும், அங்கு தயார் செய்யும் தளவாடங்களையும் பார்வையிட்டு அவைகளை துரிதமாகவும், தரமாகவும் செய்து முடிக்குமாறு டான்சி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மின்சாரத் துறைக்கு தேவையான மின் கடத்திப் பொருட்கள் மற்றும் தளவாட சாமான்களை செய்யும் கிண்டியிலுள்ள மற்ற டான்சி தொழிற்சாலைகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

2/2

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9